OS 182/2023

வா.சா.1 நிர்மலா க/பெ செந்தில்குமார்

நாள் 20.01.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்து இருக்கிறேன் என்றால் டீச்சர் டிரெய்னிங் படித்து உள்ளேன். நான் எந்த ஆண்டு படித்தேன் என்றால் 2012 ஆகும். நான் பன்னிரெண்டாம் வகுப்பு எந்த வருடம் படித்தேன் என்றால் 2002ம் ஆண்டு படித்தேன். என் வயது தற்போது 41 ஆகும். நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் எனக்கு பாகம் வேண்டி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 1ம் பிரதிவாதி என் தகப்பனார், 2ம் பிரதிவாதி என் அக்கா, 3ம் பிரதிவாதி என் தம்பி ஆவார். மூதாதையர் என்று யாரை சொல்கிறேன் என்றால் என் அப்பாவின் பெற்றோர்கள் ஆவார்கள். முதன்மை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்திருக்கிறேன். எனது அப்பாவிற்கு அவரது பெற்றோர்கள் தானப்பத்திரம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. என் முதன்மை வாக்குமூலத்தில் 4வது பத்தியில் 1ம் பிரதிவாதிக்கு அவரின் தாய், தந்தை 29.06.1986ல் ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி இருப்பதாகவும் அதன் நகலை தாக்கல் செய்திருப்பதாகவும் விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான், தான பத்திரம் என்றால் என்ன என்று எனக்கு தெரியாது.

2. என்னுடைய திருமணம் காதல் திருமணம் ஆகும். திருமணத்திற்கு பிறகு எனது கணவர் வீட்டில் வசித்து வந்தேனா என்றால் 3 அல்லது 4 வருடங்கள் வசித்து வந்தேன். 4 வருடங்களுக்கு பிறகு வழக்கு சொத்தான தாவா வீட்டில் வசித்து வருகிறேன். கடந்த 14 வருடங்களாக வசித்து வருகிறேன். 4 வருடங்களுக்கு பிறகு நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்ற போது எனக்கு நகைகள் மற்றும் சீர்வரிசை கொடுத்தார்கள் என்றால் இல்லை. 24.06.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை நான் கொடுக்கவில்லை என்றாலும் அதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனது வழக்கறிஞரிடம் கொடுத்து இருக்கிறேன். நான் பாகம் கேட்டு பிரச்சனை செய்ததால் எனது தகப்பனார் சமரசம் பேசி சாட்சிகள் முன்னிலையில் எனக்கு ரூ.2லட்சம் கொடுத்தார் என்றால் இல்லை. சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் செய்து நான் ரூ.2லட்சம் வாங்கியிருக்கிறேன் என்றால் இல்லை. 2019ம் ஆண்டில் தான் நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றாலும் அப்போது தான் பிரச்சனை செய்து பணம் ரூ.2லட்சம் பெற்றேன் என்றாலும் இல்லை.

3. எனது நிரூபண வாக்குமூலத்தில் 7வது பத்தியில் நான் ரூ.3லட்சம் கொடுத்ததாக கூறியிருக்கிறேன் எந்த வருடம் பணம் கொடுத்தேன் என்றால் வருடம் நியாபகம் இல்லை. அந்த சமயம் எனக்கு எந்த வயது இருக்கும் என்றால் 30 வயது இருக்கும். பணம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் எனக்கு திருமணம் ஆகி இருந்தது. 01.09.1992 தேதியில் ஆரணி கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் வீடு கட்டுவதற்கு அடமானக்கடன் வாங்கப்பட்டது என்றும் வீடுகட்டுவதற்காக எனது பங்காக நான் ரூ.3லட்சம் கொடுத்ததாக நான் பொய்யான விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 1992ல் எனக்கு 6வயது தான் இருக்கும் என்றால் ஆமாம். எனது நிரூபண வாக்குமூலத்தில் 9வது பத்தியில் ரூ.10லட்சத்திற்கு சொத்து விற்பனை செய்ததாக விவரம் சொல்லியிருக்கிறேன் அந்த சொத்திற்குண்டான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அது புறம்போக்கு இடமாகும். ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4. வழக்கு சொத்தில் உள்ள வீடு எப்போது கட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியாது நான் சிறு வயதாக இருக்கும்போது கட்டப்பட்டது. நான் வீடு எப்போது கட்டியது என்று தெரியாது என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் 11வது பத்தியில் ஆகஸ்ட் மாதம் 2023 ம் ஆண்டு எனக்கு தெரியாமல் சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்கிறார்கள் என்று கூறி இருக்கும் விவரம் பொய்யானது என்றால் இல்லை உண்மை தான். 2023ம் வருடம் எனது தாயாருக்கு இரணியா அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது தாயாரை வீட்டில் சென்று பார்த்தேன் என்றால் இல்லை மருத்துவமனைக்கு சென்று தான் பார்த்தேன். எனது தாயார் மருத்துவமனையில் இருந்து தாவா வீட்டிற்கு வந்த போது நான் எப்போது சென்று பார்த்தேன் என்றால் நான் வீட்டிற்கு சென்று பார்க்கவில்லை. அதன் பிறகு எனது தாயாரை எங்கு சென்று பார்த்தேன் என்றால் அதன்பிறகு நான் பார்க்கவில்லை. நான் தாவா வீட்டிற்கு சென்று தாயாரை பார்த்தேன் என்றால் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. மீண்டும் என் தாயார் அடுக்கம்பாறை மருத்தவமனைக்கு சிகிச்சைக்காக வந்த சமயத்தில் நான் தாவா வீட்டில் இருந்து ரூ.2லட்சம் பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்த ஆவணத்தை நான் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் இல்லை அது போன்ற சம்பவம் நடக்கவில்லை. மேற்படி ஆவணத்தை எடுத்து சென்ற சம்பந்தமாக ஆரணி நகர காவல் நிலையத்தில் என் மீது புகார் அளிக்கப்பட்டு அந்த புகார் மீது விசாரிக்க என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்களா என்றால் விசாரணைக்கு அழைத்தார்கள். போலீசார் விசாரிக்கும் போது அந்த ஆவணத்தை எடுத்து இருந்தால் திருப்பி கொடுக்கும் படி என்னிடம் கேட்டார்களா என்றால் கேட்டார்கள் ஆனால் நான் ஆவணத்தை எடுக்கவில்லை. 2019ல் நான் ரூ.2லட்சம் வாங்கிக்கொண்டு ஆவணம் எழுதி கொடுத்துவிட்டு தாவா வீட்டில் இருந்து சென்று விட்டேன் என்றாலும் மீண்டும் 2023 எனது தாயாரை பார்க்க வந்த சமயத்தில் அந்த ஆவணத்தை எடுத்து சென்று விட்டேன் என்றாலும் அந்த விவரத்தை மறைத்து பொய்யான வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

6. 3ம் பிரதிவாதி நாகராஜ் உடல் ஊனமுற்றவர் என்றால் சரிதான். தற்போது தாவா சொத்து 3ம் பிரதிவாதியின் பெயரில் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி உடல் ஊனமுற்றவர் என்றும் அவருக்கு திருமணம் நடக்காது என்றும் திருமணம் ஆன எனக்கு தான் மொத்த சொத்தும் வேண்டும் என்று நான் சண்டை போட்டேன் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து தான பத்திரம் மூலம் கிடைத்த சொத்து என்பதால் அவருக்கு உரிமையான சொத்து என்றாலும் அதை மூன்றாம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்து விட்டார் என்றாலும் எனக்கு பாகம் கோர உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் 1 பகுதியை 1ம் பிரதிவாதி பூங்காவனம் என்பவரிடம் இருந்து வாங்கிய சொத்து என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு உரிமையானது என்றாலும் அவர் யாருக்கு வேண்டுமானலும் எழுதி வைக்கலாம் என்றாலும் அதை நான் கேள்வி கேட்க முடியாது என்றாலும் சரியல்ல.